**OUR HON'BLE VICE CHANCELLOR DELIVERING 24th CONVOCATION DAY ADDRESS AND HANDING OVER CERTIFICATES AT THE GRADUATION DAY OF MVM GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN IN DINDIGUL ON 19.09.16**

MADURAI
THE HINDU • TUESDAY, SEPTEMBER 20, 2016

# Vice-Chancellor advocates dress code for women




**HONOURING AN ACHIEVER:** Mother Teresa University Vice-Chancellor G. Valli handing over certificate to a graduand at the Graduation Day of MVM Government Arts College for Women in Dindigul on Monday. — PHOTO: SPECIAL ARRANGEMENT

STAFF REPORTER

**DINDIGUL:** Discipline, self-control and proper dress code are essential for young women to protect themselves and avoid disturbances, harassment, and threats from external forces, said Mother Teresa Women's University Vice-Chancellor G. Valli.

Delivering the 24th Graduation Day address at the M.V.M. Government Arts College for Women here on Monday, she said that misuse or overuse of electronic gadgets and electronic media like mobile phone, computer and internet, and social media by women would invite trouble.

Several young women, who could not reveal or face such personal threats and harassment, took extreme steps like committing suicide. At the same time, use of these technology and gadgets for constructive activities would certainly help them progress in their career and life. "What the young women need now is self control and discipline while using these modern facilities," she advised.

The graduates and post graduates should not stop with their degrees. They should go for research. Their career growth should not restrict to their personal development but also for the society, she advised.

Women had enormous potential than men. Youth were the country's biggest wealth and strength. Even the U.S. was a bit apprehensive about India's youth power. Streamlining this strong force would transform the country into a powerful nation soon, Ms. Valli said.

She gave away degree certificates to 816 students, including 16 university rank holders.

தினமலர் 20/06/2016

# 'பெண்களுக்கு சுயகட்டுப்பாடு அவசியம்'

## துணைவேந்தர் வள்ளி பேச்சு

**திண்டுக்கல், செப். 20–**

'சமூக ஊடகங்களில் மூழ்கிவிடாத, ஒழுக்க நெறியுடன் கூடிய சுய கட்டுப்பாடு பெண்களுக்கு அவசியம்' என, திண்டுக்கல் எம்.வி.எம்., பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில், கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலை துணைவேந்தர் வள்ளி தெரிவித்தார்.




**திண்டுக்கல் எம்.வி.எம்.,கல்லூரியில் நடந்த விழாவில் மாணவிக்கு கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலை துணைவேந்தர் வள்ளி பட்டம் வழங்கினார். அருகில் முதல்வர் மனோலதா.**

பட்டமளிப்பு விழாவிற்கு கல்லூரி முதல்வர் மனோலதா தலைமை வகித்தார். துணைவேந்தர் பேசியதாவது: சமூக ஊடகங்கள் மூலம் நல்லது நடக்கிறது என்றாலும், பெண்கள் மீதான குற்றங்களும் அதிகரித்து வருகிறது.

அதே நேரத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருகுவதற்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சினிமாவும் காரணமாகின்றன.

பெண்கள் சமூக ஊடகங்களில் மூழ்கிவிடாத ஒழுக்க நெறியுடன் கூடிய சுய கட்டுப்பாடுடன் இருக்க பழக வேண்டும். ஏனெனில், பெண்கள் சுயகட்டுப்பாடுடன் இருப்பதில்தான் பெரும் குற்றங்களும், இழப்புக்களும் தவிர்க்கப்படும். இன்றைய பாதுகாப்பற்ற சமூகத்தில் ஒழுக்க நெறிகளுடன் கூடிய சுயகட்டுப்பாடு அவசியம், என்றார்.

விழாவில் மாணவிகள் 816 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை வரலாற்றுத் துறை தலைவர் பென்ஷிலா செய்திருந்தார்.

தினமணி 20/06/2016

# கலாசார மாற்றமே பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு காரணம்

## துணைவேந்தர்

**திண்டுக்கல், செப். 19:** சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பங்களுக்கு கலாசார மாற்றமே முக்கிய காரணம் என கொடைக்கானல் அன்னைத் தெரசா மகளிர் பல்கலை. துணைவேந்தர் ஜி.வள்ளி தெரிவித்தார்.

திண்டுக்கல் எம்விஎம் அரசினர் மகளிர் கல்லூரியில் கல்லூரி முதல்வர் செ.மனோலதா தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவர் பேசியது:

தொலைக்காட்சி, செல்லிடப் பேசி மற்றும் சமூக ஊடகங்கள் பெண்களுக்கு ஒருபுறம் பயனுள்ளதாக இருந்தாலும், சுயக்கட்டுப்பாடு என்ற எல்லையை கடக்கும் போது கடுமையான பாதிப்பையும் ஏற்படுத்தி வருகின்றன. உலகுக்கே வழிகாட்டியாக விளங்கியது இந்திய கலாசாரம்.

ஆனால் மேற்கத்திய கலாசாரத்தை பின்பற்றியதால், இந்தியப் பெண்களின் ஆடை, அலங்காரம் மாறி வருகின்றது. இதனால், சமூகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களும் அதிகரித்து வருகின்றன.



மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் கொடைக்கானல் அன்னைதெரசா மகளிர் பல்கலை. துணைவேந்தர் ஜி.வள்ளி.

இலக்கியங்களில் தெய்வத்திற்கு இணையாக பெண்கள் போற்றப்பட்டுள்ளனர். ஆண்களை விட அதிக சக்தி கொண்ட பெண்கள், சுய கட்டுப்பாடு, ஒழுக்க நெறிகளை பின்பற்றினால், எதிர்கால சமுதாயத்தில் பல சாதனைகளை நிகழ்த்த முடியும் என்றார் அவர்.

முன்னதாக அவர் 19 பேருக்கு எம்.பில் பட்டம், 141 பேருக்கு முதுகலை பட்டம், 656 பேருக்கு இளங்கலை பட்டம் என மொத்தம் 816 மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார். பல்கலை. அளவில் 17 மாணவிகள் முதல் தர[illegible] பெற்றனர்.